**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.223/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. உதயக்குமார் |
| Husband/Father Name | வீரபத்திரன் |
| Village /Area | நேருஜி நகர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.01.2026.

**(எதிரி 2 ஆஜர். எதிரி 1 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 17.06.2024 அன்று கார் எடுப்பதற்காக நான் சென்றுக்கொண்டிருந்த போது போலீசார் ஜோதி நகர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே விசாரித்துக்கொண்டிருந்தனர். அங்கு முன்தினம் சண்டை நடந்ததாக அது குறித்து விசாரித்து கொண்டிருந்தது தொடர்பாக என்னிடம் சாட்சிக் கையொப்பம் கேட்டதன் அடிப்படையில் நான் சாட்சி கையொப்பம் இட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அங்கு பெயர் தெரியாத ஒரு நபருக்கு அடிப்பட்டதாக போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

17.06.2024 அன்று காலை 09.00 மணிக்கு முன்பாகவே நான் சம்பவ இட வழியாக சென்றேன். அப்போது குறிப்பிட்டு நேரம் என்ன இருக்கும் என்று என்னால் தற்போது கூற இயலாது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் எத்தனை போலீசார் விசாரணை நடத்திக்கொண்டிந்தார்கள் என்றால் 3 பேர் இருந்தார்கள். விசாரித்த காவலர்களின் நிலை பற்றி எனக்கு தெரியாது.

நான் கையொப்பம் செய்த தாளில் விவரம் எதுவும் எழுதப்படவில்லை. போலீசார் கையொப்பம் இடச் சொன்னதன்

அடிப்படையில் தான் அந்த தாளில் கையொப்பம் இட்டேன். மற்றபடி வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு தாளில் மட்டும் தான் கையொப்பம் இட்டேன்.

போலீசார் அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் கூற வந்துள்ளேன்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.19 18:52:11 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.